133

SEA-MINES.

கடற் சுரங்கங்கள்

அல்லது எதிரிக் கப்பல்களை நாசமாக்கும் விதங்கள்.



OFFICE OF THE REGISTRAR OF
7 - JUL 1916
MADRAS.

...ANATHA AIYER, B.A., L.T.,
... TOPE, TRICHINOPOLY.

1916.

22C
NH
142229

133

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
REGISTERED
JUL 1916
MADRAS

கடற்சுரங்கங்கள்.

கடற்சண்டைகளில் எதிரிகளின் கப்பல்களை நாசமாக்குவதற்காகப் பல ஏதுக்களை அதாவது கருவிகளை அல்லது சாதனங்களை உபயோகப்படுத்துகிறார்கள். முதலாவது:— ஸப்மாரின் அல்லது ஸமுத்திரத்திற்கு அடியில் செல்லும் கப்பல் மூலமாய் டார்பிடோவென்னும் கொடிய யந்திரங்களை சத்துருக்களுக்குத் தெரியாமல் உபயோகித்து கப்பலின் அடிகளைத் தகர்த்து நாசமாக்குவார்கள். எதிரிக்கப்பல்களை நாசமாக்குவதற்கு இன்னொரு விதமுண்டு. அதென்னவென்றால், ஸமுத்திரத்தின் மேலும் அடியிலும் நடுவிலும் மிகவும் கொடிய வெடிமருந்து அடங்கிய பெரிய இரும்பு உருண்டைகளை ரகசியமாய் வைத்துவிட்டு அவைகள் அந்தந்தவிடத்தில் மிதந்து கொண்டிருக்கும்படியான ஏற்பாடுகள் செய்து விடுவார்கள். இப்படியிருக்க இச்சுரங்கங்களின் பக்கத்தில் கப்பல் ஏதாகிலும் மோதினால் உடனே அச்சுரங்கங்கள் பயங்கரமான வெடியுடன் அக்கப்பலை உடைத்துச் சின்ன பின்னமாக்கி விடும். இப்பேர்ப்பட்ட சுரங்கங்கள் நிறைந்திருக்கிற கடல் வழியாய்ச் செல்வதற்கு எந்தக் கப்பல் தலைவரும் துணியார்கள்.

இவ்விதமான கொடிய சுரங்கங்களை ஜப்பானி

147779

யர்கள் ருஷியருடன் யுத்தஞ் செய்யுங்காலத்தில் உபயோகித்தார்கள். அதுமுதல் புதுபுது சங்கதிகளைக் கண்டு பிடித்து வந்தார்கள். கடைசியாக இக்காலத்தில் கடற்சுரங்க வித்தையில் ஐரோப்பியர்கள் கைதேர்ந்திருக்கின்றனர்.

வெடி மருந்தடங்கிய இச்சுரங்க உருண்டைகள் பலவாறாயிருக்கும். சில, சமுத்திரத்திற்கு அடியிலே வைக்கப்பட்டிருக்கும்.

இவ்விதச் சுரங்கங்கள் சண்டை காலங்களில் துறைமுகங்களின் பக்கத்தில் எதிரிக் கப்பல்கள் வராதபடி காப்பதற்காக உதவுகின்றன. சமுத்திரத்தின் அடிபாகத்தில் போடப்பட்ட சுரங்கங்கள் கறையிலுள்ள ஓர் அறையோடு எலெக்ட்ரிக் கம்பிகளால் பிணைக்கப்பட்டிருக்கும். ஒவ்வொரு சுரங்க உருண்டைக்கும் நம்பர் உண்டு. சொந்தக் கப்பல்களும் மித்திரர்களின் கப்பல்களும் துறைமுகங்களுக்குள் வரும்போது அப்பேர்ப்பட்ட சுரங்கங்கள் இருப்பது போலவே தோன்றாது. ஆனால் எதிரிக் கப்பல் ஏதேனும் தோன்றினால், கறையிலுள்ள அறையிலிருந்து கவனமாய்ப் பார்த்துக் கொண்டு வருகிற உத்தியோகஸ்தர், யந்திரத்தில் ஓர் பித்தானை அழுத்துவார். அப்படி அழுத்தினவுடனே, சமுத்திரத்திற்கடியிலிருக்கும் உருண்டை, மேலே கிளம்பி வெடித்து, எதிரிக்கப்பலை துண்டு துண்டாக உடைத்து ஆகாயத்தில் சிதறி எறிந்துவிடும். அக் கப்பலின்மேல் நாட்டப்பட்டிருக்கும் பீரங்கிகள் முதலிய ஆயுதங்களும், மற்ற சாமான்களும், இறகு

போல பறந்துபோய், இருந்தவிடந் தெரியாமல் போய்விடும். எதிரிக்கப்பல்கள் தப்பிவிடலாமென்று நினைத்து, வேகமாய்க் குறுக்கே பலவிதமாய்ப் பாய்ந்து ஓடினபோதிலும் பயனிராது.

ஒரு சுரங்கத்தைத் தப்பிக்கொண்டு போனால், மறு சுரங்கத்தில் அகப்பட்டுக் கொள்ளுவது நிச்சயம். கரையிலிருக்கும் உத்தியோகஸ்தர், 1-ம் நெ. வெடியைவைத்து, அதை எதிரி தப்பித்துக் கொண்டால், மறுபடியும் 4-ம் நம்பரோ, 7-ம் நம்பரோ, சமயத்திற்குத் தக்கபடி வைத்து அழுத்தி சத்துருவைத் தப்பவிடமாட்டார்.

இவைகள் தான கடலுக்கடியில் துறைமுகங்களுக்குச் சமீபத்தில் வைக்கப்படும் சுரங்கங்கள். மற்றவித சுரஙகங்கள, கரைக்கு அப்பால் நடுக்கடலில், கப்பல்கள் போகும்வழியில், ஆழமான இடத்தில் போடாமல், தண்ணீருக்கு 12 அடிக்குக் கீழே வைக்கப்படும். இப்பேர்ப்பட்ட சுரங்கங்கள் நடுக்கடலில் போடுவதற்காகவே பிரத்தியேகமாய் ஏற்பட்டவை. கப்பல்கள் இரவு காலத்தில் விளக்கெல்லாம் அணைத்துவிட்டு முன்சொல்லிய கொடிய சுரங்கங்களை விதைத்துவிட்டுப் போய்விடும்.

அச்சுரங்கங்களின பக்கத்தில் ஏதேனும் கப்பலொன்று மோதினால், கப்பல் உடைந்து நாசமாகிவிடும். ஆனால் இப்படிச் செய்வதில், எதிரிகளின் கப்பல்கள் நாசமாவதோடு சொந்தக் கப்பல்கள் கூட சிலசமயம் நாசமடையக்கூடும். இதற்காகச் சுரங்கங்கள் வைத்திருக்கும் இடம் இது தானென்று

குறித்துக் கொண்டு, அப்பக்கம் போகாமலிருக்கும்படி சொந்தக் கப்பல்களுக்கு எச்சரிக்கைப்படுத்துவார்கள்.

இரண்டு கப்பற்படைகளுக்கு சமுத்திரத்தில் சண்டை நடக்கும் சமயங்களில்கூட சுரங்கங்களைத் தந்திரமாய் உபயோகிக்கக்கூடும். இதற்குத் திர்ஷ்டாந்தமாக சில வருஷங்களுக்குமுன் ருஷியா தேசத்திற்கும் ஜப்பான் தேசத்திற்கும் நேரிட்ட யுத்தத்தில் நடந்த ஓர் விருத்தாந்தத்தைச் சொல்லுவோம். ஒரு பக்கத்திலிருந்து ஜப்பானியர்களைச் சேர்ந்த ஒரு சிறு கப்பல்படை வந்தது. இதைக்கண்டவுடன் கடலின் மற்றொரு பாகத்தில் சாவதானமாய் தங்கிக் கொண்டிருந்த ஓர் ருஷிய கப்பல் கூட்டம், ஜப்பானியர்களைச் சுலபமாக ஜயிக்கலாமென்று கருதி முன்னேக்கி வந்து சண்டைபோடத் துவக்கிற்று. இப்படி இருதிறத்தாரும் சண்டை போட்டுக் கொண்டிருக்கையில், ஜப்பானியர்கள் போதுமான பலமில்லாதவர்கள் போல் தோன்றினார்கள். இப்படியிருக்க ஜப்பானியர்களின் கப்பலொன்று ருஷியர்களுக்குப் பின் யாருக்கும் தெரியாமல் சென்று, அவர்கள் திரும்பிப் போகும் மார்க்கத்தில் ஏகமாய் சுரங்கங்களைத் தெளித்துவிட்டு வந்தது. இதற்குள் ருஷியரோடு சண்டையிட்டுக் கொண்டிருக்கும் ஜப்பானியருக்கு உதவிசெய்ய, இதுவரையில் மறைந்துகொண்டிருந்த அநேக ஜப்பானிய கப்பல்கள் வெளிக்கிளம்பி வந்தன. இதைப்பார்த்ததும் திகிலடைந்து, ருஷிய கப்பல்கள் பின்வாங்கின. ஆனால் திரும்பும் மார்க்

147279

சத்தில் ஜப்பானியர்கள் தெளித்திருந்த சுரங்கங்களில் அகப்பட்டுக் கொண்டு, முதலில் வந்த பெரிய சண்டைக் கப்பல், உடைபட்டு சமுத்திரத்திற்குள் முழுகிவிட்டது.

வெடிகளைச் சமுத்திரத்தில் கண்டபடி மிதக்க விடுவதும் வழக்கந்தான் இப்படி கட்டில்லாமல் மிதந்து கொண்டுபோனால், தூரமான இடங்களுக்கு அவைகள் போய்ச் சேர்ந்து யுத்தம் முடிந்த பிறகு கூட, எங்கேயாவது சென்று கொண்டிருக்கும் கப்பல்களுக்கு முதலாய் ஆபத்தை வருவிக்கக்கூடும். ஆகையால் இப்பேர்ப்பட்ட வெடிகளை வைப்போர் வெடிகள் கொஞ்சகாலத்திற்குப் பின் சாரமில்லாமல் போகும்படி முன்னதாகவே ஏற்பாடு செய்து கொள்ளுவார்கள்.

இவ்வாறு சமுத்திரத்தில் அடியிலும் நடுவிலும் மேல்பக்கங்களிலும் சத்துருக்களால் இறைக்கப்படுகிற வெடிகளைப் போக்குவதற்காக, பிரத்தியேகமான சில கப்பல்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. இம் மாதிரிக்கப்பல்கள் முன்னும் இரண்டு பின்னுமாய்ச் சென்று, அவைகளின் முனையிலிருந்து நீண்ட கம்பளிகளைச் சமுத்திரத்திற்குள் விட்டு, இதனால் எதிராளிகள் ஸமுத்திரத்தில் கட்டி வைத்திருக்கும் வெடிகளையும், அவைகளைத் தாங்கிக்கொண்டிருக்கும் சங்கிலிகளோடு இழுத்து விட்டுவிடும். இப்படிச்செய்யும் போது, சிலவெடிகள் ஒன்றோடொன்று மோதிக் கொண்டு திடீரென்று வெடித்து தண்ணீரை வெகு பலமாக மேலே கிளப்பித்தள்ளும். அகப்பட்ட

மற்ற வெடிகளெல்லாவற்றையும் ஒன்றுசேர்த்து அப்பால் ஓரிடத்தில்வைத்து, அதில் குறிவைத்துச் சுட்டு நாசமாக்கிவிடுவார்கள்.

ஆகவே ஒரு பக்கத்தார் வெடிகள் வைக்கவும், மறுபக்கத்தார் அவைகளால் சேதமொன்றும்வராமல் அப்புறப்படுத்தவும் முயல்வார்கள். நம்முடைய பிரிட்டிஷ் ராஜாங்கத்தைச்சேர்ந்த கப்பல் கூட்டத்தில், அநேக கப்பல்கள், வெடி சுரங்கங்களை அப்புறப் படுத்தும் வேலைகளில் தீவிரமாய் முயன்று கொண்டு எதிரிகளின் தந்திரங்களையெல்லாம் நாசமாக்கி ராஜ்யத்தின் கௌரவத்தைக் காப்பாற்றி வருகின்றன.

யுத்தத்தின் அகோரங்கள்.

யுத்த சமயங்களில் எதிரிகள் அக்கம்பக்கத்திலுள்ள கடலில் இம்மாதிரி சுரங்கவெடிகளை இறைத்து வைப்பதால் நேரிடுகிற நாசத்தையும் சேதத்தையும் சொல்லி முடியாது. சண்டைக் கப்பல்கள் மாத்திரமல்ல; ஒருவருக்கும் தீங்கு நினைக்காமல் செல்லும் பிரயாணிக் கப்பல்கள் வியாபாரிக் கப்பல்கள், மீன் பிடிக்கும் கப்பல்கள், ஆகிய பலவிதக் கப்பல்களும் திடீரென நாசமடைந்து இருந்தவிடம் தெரியாமற் போய்விடுகின்றன.

ஸப்மாரீன் என்னும் சமுத்திரத்திற் கடியில் செல்லும் கப்பல் மூலமாய் டார்பீடோ என்னும் கொடிய யந்திரத்தைத் தண்ணீருக்குள்ளாக செலுத்

திக் கப்பல்களை நாசமாக்கும் விதத்தை வேறொரு புத்தகத்தில் எழுதியிருக்கிறோம். இப்படிச்செய்யும் விஷயத்தில், யுத்தக் கப்பல்களுக்குத் தீங்கு விளைவித்தால், அதற்கு யாரும் ஆக்ஷேபனை சொல்ல முடியாது. அது நியாயம்தான். ஆனால் ஆயுதம் தரிக்காத ஜனங்களுக்கு சேதத்தை உண்டாக்குவதைப் போல அவ்வளவு கொடூரமான பாதகம் வேறொன்றுமில்லை இப்போர்ப்பட்ட அநியாயங்களை ஜர்மானியர் செய்ததைப்பற்றிப் பத்திரிகைகளில் வெகுவாய்ப் படித்திருக்கிறோம்.

இந்த யுத்தங்களில் நடந்த பாதகங்களுக்குள் ல்யூஸிடானியா (Lusitania) என்னும் பிரமாண்டமான பிரயாணிக் கப்பலை, ஜெர்மானியர்கள் டார்பிடோ மூலமாய் நாசமாக்கினதை விசேஷமாய் எடுத்துச் சொல்லலாம். இச்சிறந்த கப்பல் அமெரிக்கா தேசத்திலிருந்து இங்கிலாந்து தேசத்திற்கு 2000 பிரயாணிகளை ஏற்றிக்கொண்டு வந்தது. வரும்போதே பிரயாணிகளுக்கு என்ன ஆபத்து வழியில் நேரிடுமோ எதிரிகளின் ஸப்மரீன் எங்கேயாவது மறைந்து கொண்டிருக்குமோ வென்று திகிலாகவே யிருந்தது. இங்கிலாந்து தேசத்தின் கரைக்குச் சமீபத்தில் நெருங்க, ஓர் ஸப்மரீனின் மேலே நீட்டிக் கொண்டிருந்த ஸ்தம்பம் தெரிந்தது. சில நிமிஷத்திற்குள் தண்ணீருக்குள் நீந்திக்கொண்டு நுரைத்து வருவதைக் கண்டார்கள். இதைக்கண்ட சில நேரத்திற்குள் கப்பலில் பயங்கரமான வெடியுண்டாயிற்று. அதற்குப் பின்ன கப்பலும் பிளர்ந்து போய் தண்ணீரில்

முழுக ஆரம்பித்தது. இந்த நிர்ப்பாக்கிய ஸ்திதியை அறிந்த பிரயாணிகள் ஏகமாய் அலறவும், கூக்குரலிடவும், தப்பிக்க வழி பார்க்கவும் துவக்கினர். பெண்களும், குழந்தைகளும், சிசுக்களும், ஓரே கூச்சலிட்டார்கள். சிலர் படகுகளில் ஏறிக்கொண்டு பிழைத்தார்கள். சிலர் ஒரு மாதிரி பெல்டை (Lifebelt) க் கட்டிக்கொண்டு கரை சேர்ந்தனர். பிரயாணிகளில் ஒருவராயிருந்த ஒரு பெரிய பணக்காரர் தன்னுயிரைக்கூட கவனிக்காமல் பிறர்களை ரட்சிப்பதிலேயே முயன்று கொண்டு, மறித்தார். ஆனால் பெரும்பான்மையோர் முழுகிப்போனார்கள். இந்தப் பெரிய பாதகத்தைக் கேட்டதும், ஜெர்மனியர்களை இகழ்ந்து சபிக்காதவர்கள் கிடையாது. தூங்கிக்கொண்டிருக்கிறவன் மேல கல்லைத் தூக்கிப் போடுவதுபோன்ற இச்செய்கையை யார் சரியென்று சொல்லக்கூடும்? யுத்தக் கப்பல்களிலல்லவா வீரச் செயலைக் காட்டவேண்டும்! அப்படிச் செய்ய ஸாமர்த்தியமில்லாத ஜெர்மானியர்கள் கையிலாகாதவர்களையும், அநாதர்களையும், அக்கிரமமாய் இம்சிப்பதையே தர்மமாகக் கொண்டாடுகிறார்கள். இப்பேர்ப்பட்ட அநியாயங்களுக்கு முடிவு சீக்கிரத்தில் வந்துவிடுமென்பதற்குச் சந்தேகமில்லை.

14279

Printed at the Wednesday Review Press, Trichinopoly.

இனிய தமிழ் புஸ்தகங்கள்.

விலை 6 பைசா.

1. சமுத்திரத்திற்குள் செல்லும் கப்பல் (Submarine).
2. ஆகாயக் கப்பல் (The Airship).
3. ஆகாய மோட்டார் (The Aeroplane).
4. ஹிதோபதேசக் கதைகள்.
5. நன்றியறிவுள்ள அடிமையின் உருக்கமான கதை.
6. கடற்-சுரங்கங்கள் அல்லது கப்பல்களை நாசமாக்கும் சில விதங்கள்.
7. லியோனிதாஸ் கிரீக் வீரன் சரித்திரம்—அல்லது 300 பேர் 3000 பேரை விரட்டின கதை. 1 அணா.
8. பெண்மணி கிரிஸெல்டாவின் அற்புதமான சரித்திரம்.
9. எலிஸபெத் அம்மாள் கதை.
10. ஹாவர்ட் என்னும் லோகோபகாரி.
11. நெப்போலியன் சரித்திரம், அல்லது ஐரோப்பாவை நடு நடுங்கச்செய்த வேங்கை. 1 அணா.
12. ஓர் கன்னியாரத்னம்—தகப்பனுக்காக 3000 மைல் நடந்த கன்னிகையின் அருமையான கதை.
13. ஜூலியஸ் ஸிஸர்—அரசனாக விரும்பினவர் கொலையுண்ட கதை.
14. ஐந்து நீதிக்கதைகள்.
15. இங்கிலாந்து தேச சரித்திரக்கதைகள்.
16. பிரான்ஸ் தேசக்கதைகள்.
17. டென்னிஸன் மகா கவியின் கதை.
18. ராபின்ஸன் குருஸோவின் விசித்திரமான கதை.
19. ஈஜிப்ட் தேசத்தின் அதிசயங்கள்.
20. யுத்த வீரர்கள்.
21. புண்ய சிகாமணிகள்.
22. இந்தியா தேச சரித்திரக்கதைகள்.
23. க்ரீஸ் தேச சரித்திரக்கதைகள்.
24. ரோம் ராஜ்யக் கதைகள்.
25. நிர்ப்பாக்கிய அரசர்களின் கதைகள்.

G. VAIDYANATHA AIYER, B.A., L.T.,
St. Mary's Tope, Trichinopoly.